

முன்னாள் அமைச்சர் கோ.சி.மணியின் 8ம் ஆண்டு நினைவு நளை முன்னிட்டு மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலத்தில் ஒன்றிய தி.மு.க. அலுவலகத்தில் உள்ள கோ.சி.மணியின் சிலைக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் ஆகியோர் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. உடன் மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மங்கை எம்.சங்கர், கு.வைத்தியநாதன், ஏ.ஆர்.ராஜா, ஞான. இமையநாதன், மலர்விழி திருமாவளவன், பஞ்சு.குமார், பி.முருகமணி, அமிர்தவிஜயகுமார், மயிலாடுதுணை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், குத்தாலம் பேரூர் கழகச் செயலாளர் எம்.சம்சுதீன், பொதுக் குழு உறுப்பினர்கள் காந்தி, வின்செண்ட்,மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே.மருது, க.அறிவழகன், சௌமியன் மற்றும் பலர் உள்ளனர்.

### கடலூர் மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்டு

# முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு நிவாரணப் பொருட்கள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

கடலூர், டிச.05

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளை நேற்று முன்தினம் (3.12.2024) நேரில் பார்வையிட்டு, முகாம்களில் தங்கியுள்ள பொதுமக்களுக்கு நிவாரண உதவிப்பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கி, சீரமைப்பு பணிகளை முடுக்கி விட்டார்.

கடலூர் மாவட்டத்தில் ஃபெஞ்சல் புயல் மழையினால் தென்பெண்ணையாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக 4,321 குடும்பங்களைச் சேர்ந்த 6,601 ஆண்களும் 7,108 பெண்களும் 1,129 குழந்தைகள் என மொத்தம் 15,712 நபர்கள் மீட்கப்பட்டு 35 நிவாரண மையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கடலூர் மாவட்டம் மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி ஜி.எஸ்.மகாலில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக தென்பெண்ணை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட கீழ்கவரப்பட்டு, கோழிப்பாக்கம், சின்ன பகண்டை, கொங்கராயநல்லூர் ஆகிய கரையோர ஊராட்சிகள் மற்றும் மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சியைச் சேர்ந்த பொதுமக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மேல்பட்டாம்பாக்கம் நிவாரண முகாமில் தங்கியுள்ள பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து, அரிசி, மளிகை, பெட்ஷீட், புடவை உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

மேலும், கடலூர் புதுவை சாலையில் அமைந்துள்ள சின்னகங்கனாங்குப்பம், பெரியகங்கனாங்குப்பம் பகுதிகளில் தென்பெண்ணை ஆற்று வெள்ள நீர் புகுந்ததால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிட்டும், புயல் மழை காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த புகைப்படங்களை பார்வையிட்டும் ஆய்வு மேற்கொண்டார். பெரிய கங்கனாங்குப்பத்தில் நடைபெறும் மருத்துவமுகாமை பார்வையிட்டு ஆய்வு செய்து மருத்துவர்களிடம், முகாமிற்கு வருகைதரும் பொதுமக்களின் எண்ணிக்கை குறித்தும், எந்தவிதமான மருந்துவ தேவைகள் உள்ளன என்றும் கேட்டறிந்தார்.

கடலூர் மாநகராட்சி மஞ்சக்குப்பம் விக்னேஷ் மகாலில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள தென்பெண்ணை ஆற்றின் வெள்ள நீரால் பாதிக்கப்பட்ட கடலூர் மாநகராட்சியின் திடீர் குப்பம், எம்.ஜி.ஆர் நகர், கே.டி.ஆர் நகர், பெண்ணையாற்று சாலை, தட்சிணாமூர்த்தி நகர், நேரு நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 1500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு துணை முதலமைச்சர் அவர்கள் அரிசி, மளிகை பொருட்கள், போர்வை, புடவை, கைலி உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

பின்னர் கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், ஃபெஞ்சல் புயல்மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விளைநிலங்கள், துண்டிக்கப்பட்ட சாலைகள், பழுதடைந்த மின்கம்பங்கள், உயிரிழந்த கால்நடைகள், வீடுகள் உள்பட மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள், இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள சீரமைப்பு பணிகள், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

இயற்கை பேரிடரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் மாவட்ட நிர்வாகம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு பாராட்டு தெரிவித்து, பொதுமக்கள் விரைவில் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப அனைத்துதுறை அலுவலர்களும் அர்ப்பணிப்பு உணர்வுடன் தங்களுடைய பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

தண்ணீர் வெளியேற்றப்பட்ட பகுதிகளில் உள்ளாட்சி நிர்வாகத்தினர் சுகாதார பணிகளை மேற்கொள்வதுடன், பொதுமக்களுக்கு மருத்துவ முகாம்கள் நடத்தி, மருத்துவ ஆலோசனைகளையும், மருந்து பொருட்களையும் வழங்குமாறும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.ஐயப்பன், சபா.இராஜேந்திரன், எம்.ஆர்.இராதாகிருஷ்ணன், மேயர் திருமதி சுந்தரிராஜா, சிறப்பு கண்காணிப்பு அலுவலர் / ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க.நந்தகுமார், தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு திட்ட இயக்குனர்/ மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ராமன், மாவட்ட ஆட்சித்தலைவர் சி.பி. ஆதித்யா செந்தில்குமார் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வராகப் பொறுப்பேற்று முதன்முதலாக

# இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு வருகை தரும் உதயநிதி ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் ஆர்.காந்தி அறிவிப்பு!

இராணிப்பேட்டை, டிச. 5-

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி கலந்து கொண்டு கழக இளைஞரணி செயலாளர், தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நமது மாவட்டத்திற்கு வருகை குறித்து, தமிழ்நாடு அரசு வளர்ச்சி திட்ட பணிகளின் ஆய்வு குறித்து ஆலோசனை வழங்கினார்.

இதில் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர். வினோத் காந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கண்ணையன், சுந்தரம், அசோகன், கலைமணி, மாவட்ட துணைச் செயலாளர்கள் மு. சிவானந்தம் துரை மஸ்தான், குமுதா குமார் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கூட்டத்தில் நிறை௦வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :

கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக அரசுகள ஆய்வுக்காக நாளை (6ந் தேதி வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு நமது மாவட்டத்திற்கு வருகை தருகிறார்.

தமிழக முழுவதும் அரசின் திராவிட மாடல் நாயகர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் நல்லாட்சியின் திட்டங்கள் பொதுமக்களுக்கு எவ்வாறு சென்றடைகிறது என்கிற கழக அரசின் கள ஆய்வுக்காக ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று வெற்றிகரமாக சுற்றுப்பயணம் செய்து வருகிறார்.

வெற்றி பயணத்தின் தொடர்ச்சியாக நமது மாவட்டத்திற்கு வெள்ளிக் கிழமை அன்று வருகை தருகிறார். இளைஞர்களின் மத்தியில் கொள்கை பாசறை நடத்தி கழகத்திற்கு லட்சக் கணக்கான இளைஞர்களை ஈர்த்தவர். வரலாற்று சிறப்பு மிக்க இளைஞரணி இரண்டாவது மாநில மாநாடு சேலத்தில் நடத்தி வரலாறு கண்டவர்.

தற்போது தமிழக முழுவதும் ஆயிரக் கணக்கான இளைஞர்கள் மாணவர்களித்தில் பேச்சுப்போட்டி நடத்தி பேச்சாளராக பலரை உருவாக்கி கொண்டிருப்பவர் உதயநிதி ஸ்டாலின் ஆவார்.

இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையில் பொறுப்பேற்று இந்தியாவிலேயே தமிழகம் விளையாட்டுத் துறையில் முதன்மை பெற செய்தவர். துணை முதல்வராக வருங்காலத்தில் தமிழகத்தை வழிநடத்த இருப்பவர் உதயநிதி ஸ்டாலின் ஆவார்.

தமிழக துணை முதலமைச்சராக பொறுப்பேற்று தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து ஆய்வு மேற்கொண்டு கழக அரசின் நலத்திட்டங்கள் பொதுமக்களுக்கு சென்றடையும் வகையில் சிறப்பாக ஆய்வு செய்து பணியாற்றி அனைத்து மக்களிடத்திலும் நன்மதிப்பை பெற்று கழகத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் கழகத்திற்கும் பெருமை பெற்று தருபவர் உதயநிதி ஸ்டாலின் ஆவார் .

தமிழ்நாடு துணை முதல்வராக பொறுப்பேற்று முதன்முதலாக நமது மாவட்டத்திற்கு வருகை தரும்உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிப்பது நமது தலையாய கடமையாகும்.

வருகிற வெள்ளிக்கிழமை அன்று 11 மணி அளவில் இராணிப்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளி விளையாட்டு திடலில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளில் மாவட்டத்தில் உள்ள 280 ஊராட்சிகளுக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும்விழா நடைபெறுகிறது.

விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்பை ஒவ்வொரு ஊராட்சிகளுக்கும் தமிழக துணை முதல்வர் அவர்கள் வழங்கி சிறப்புரை நிகழ்த்த உள்ளார்.

எனவே மாவட்ட கழக நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள்,பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு மேற்கண்ட நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடைபெற முழு ஒத்துழைப்பு தரவேண்டும் என தீர்மானிக்கப்படுகிறது

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### நாடாளுமன்றத் தேர்தல் சமயத்தில் பங்கு மார்க்கெட்டில் ஏற்பட்ட திடீர் ஏற்ற, இறக்கம்:

# ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

## மாநிலங்களவையில் டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி!

புதுடெல்லி, டிச. 4-

கடந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தல் முடிந்த சமயத்தில் பங்கு மார்க்கெட் வர்த்தகத்தில் ஏற்பட்ட திடீர் வீழ்ச்சியால் முதலீட்டாளர்களுக்கு பல லட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது உண்மையா? அது தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டதா? எல்.ஐ.சி. மற்றும் பொதுத்துறை வங்கிகள் பங்கு மார்க்கெட்டில் முதலீடு செய்துள்ள பணம் எவ்வளவு என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பியிருந்தார்.



இதற்கு ஒன்றிய நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சவுத்ரி அளித்த பதில்:

உலக அளவிலான பொருளாதார சூழல், அதனால் வெளிநாட்டிலிருந்து செய்யப்படும் முதலீட்டில் ஏற்படும் தாக்கம், உள்நாட்டு பொருளாதார சூழல் மற்றும் பெரும் நிறுவனங்களின் ஒட்டுமொத்த செயல்பாடு ஆகியவைதான் பங்கு வர்த்தகத்தில் ஏற்ற இறக்கங்களைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகள்.

சென்செக்ஸ் மற்றும் நிப்டி 50 ஆகிய இரண்டு குறியீடுகள்தான் பங்கு வர்த்தகத்தின் போக்கை உணர்த்தும். 2024 நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் கடந்த மார்ச் 16ம் தேதி அறிவிக்கப்பட்டதில் இருந்து ஜூன் 3 ம் தேதி வரை சென்செக்ஸ் 5.3 % நிப்டி 5.6 % உயர்வு கண்டன. ஜூன் 4 ம் தேதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாளில் சென்செக்ஸ் 5.7 %; நிப்டி 5.9% குறைந்தன.

ஆனால் அடுத்த மூன்றே நாட்களில் அதுவரை இல்லாத அளவுக்கு சென்செக்ஸ் 11.3 % ; நிப்டி 10.9 % உயர்ந்து. அடுத்த இரண்டு நாட்களையும் சேர்த்து மொத்தம் ஐந்தே நாட்களில் பங்கு மார்க்கெட்டில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்கள் சரிவிலிருந்து முழுமையாக மீண்டு, தங்களது மதிப்பில் 50 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு உயர்வைக் கண்டன.

இந்த ஏற்ற இறக்கங்கள் குறித்து பங்கு வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் செபி அமைப்பு கவனத்தில் கொண்டதே தவிர, இதில் முறைகேடு நடந்ததாக எந்தப் புகாரும் செபியின் கவனத்திற்கு வரவில்லை.

பொதுவாகவே, பங்கு வர்த்தகத்தில் தொடர்ச்சியான கண்காணிப்பை செபி செலுத்தி வருகிறது. ஏதேனும் முறைகேடு கண்டறியப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்க அந்த அமைப்புக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

பொதுத்துறை நிறுவனமான எல்.ஐ.சி., மார்ச் 2024 நிலவரப்படி 7.42 லட்சம் கோடி ரூபாய் பங்கு வர்த்தகத்தில் முதலீடு செய்துள்ளது. அதன் தற்போதைய மார்க்கெட் மதிப்பு 14.58 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது.

பொதுத்துறை வங்கிகளைப் பொறுத்தமட்டில் நவம்பர் 2024 நிலவரப்படி, பாரத ஸ்டேட் வங்கி, பஞ்சாப் நேஷனல் வங்கி, இந்தியன் வங்கி, கனரா வங்கி உட்பட 12 வங்கிகள் பங்கு வர்த்தகத்தில் முதலீடு செய்துள்ளன. அதிகபட்சமாக பாரத ஸ்டேட் வங்கி 15,257 கோடியும், குறைந்தபட்சமாக பஞ்சாப் & சிந்த் வங்கி 22 கோடி ரூபாயும் முதலீடு செய்துள்ளன.

இவ்வாறு அமைச்சர் பங்கஜ் சவுத்ரி பதிலளித்தார்.

### திராவிட மாடல் அரசு

# ஆதிதிராவிடர் மக்களுக்கு அரணாகத் திகழ்கிறது!

## மாவட்ட ஆலோசனைக் கூட்டத்தில் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. பேச்சு

திருவள்ளூர், டிச. 5-

திமுக ஆதிதிராவிடர் நலக்குழு அணி சார்பில் ஒருங்கிணைந்த கோவை மற்றும் திருப்பூர் மாவட்ட ஆலோசனை மற்றும் ஆய்வுக் கூட்டம் வால்பாறை பகுதியில் ஆதிதிராவிடர் நலக்குழு அணி மாநிலச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, தலைமையில் நடைபெற்றது. இதில் மாநில இணைச்செயலாளர் திப்பம்பட்டி ஆறுமுகம் வரவேற்றார். மாநில இணைச் செயலாளர்கள் வி.பி.ராஜன், புஷ்பராஜ், மருதூர் ராமலிங்கம், கொடநாடு பொன் தோஸ், இ.ராசேந்திரன், மாரியப்பன் கென்னடி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைத் தலைவரும் அமைச்சருமான மா.மதிவேந்தன், கோவை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினர். முன்னதாக மாவட்டத்தில் ஆதிதிராவிடர் அணி மேற்கொண்ட கழகப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.



துணை முதலமைச்சர் திராவிட முன்னேற்ற கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளில் குடியாத்தம் நகரத்தில் அமைந்துள்ள 17 நகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ செல்வங்களுக்கு வேலூர் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளரும் குடியாத்தம் நகர மன்ற உறுப்பினருமான அர்ச்சனா நவீன் சங்கர் தலைமையில் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக குடியாத்தம் நகர செயலாளரும் குடியாத்தம் நகர மன்ற தலைவருமான எஸ். சௌந்தரராஜன் கலந்து கொண்டு குழந்தை செல்வங்களுக்கு இனிப்புகள் வழங்கினார். இதில் 5வது வார்டு நகர மன்ற உறுப்பினர் என். கோவிந்தராஜ், 4வது வார்டு நகர மன்ற உறுப்பினர் ஏகாம்பரம், 3வது வட்ட கழக செயலாளர் வா.விஜயகுமார் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

இதனை தொடர்ந்து மாநிலச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ தெரிவிக்கையில் சாதி வேறுபாடு களால் ஒடுக்கப்பட்ட மாந்தர்களின் உரிமைக்காகவும், விடுதலைக்காகவும் அவர்களது மனித மாண்பை மீட்டெடுப்பதற்காகவும் அறிவாயுதம் ஏந்திய புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் காட்டிய சமூக நீதிப் பாதையின் வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது தி.மு.க. அரசு என்று தெரிவித்தார்.

# விருப்பாட்சியில் சாலை தரம் உயர்த்த அடிக்கல் நாட்டு விழா!

ஒட்டன்சத்திரம், டிச. 5-

திண்டுக்கல் மாவட்டம் மற்றும் ஒட்டன்சத்திரத்தில் விருப்பாட்சியில் சாலை தரம் உயர்த்த அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தெற்கு ஒன்றியம் விருப்பாட்சியில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி முயற்சியில் விருப்பாச்சி தலையூத்துஆறு சாலை மற்றும் வடமதுரை ஒட்டன்சத்திரம் சாலையில் இருந்து சட்டையப்பனூர் செல்லும் சாலை தரம் உயர்த்தும் பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழா ஒன்றிய செயலாளர் தர்மராஜன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர் பொன்னுவேல், உதவி பொறியாளர் நாகநாதன், ஒன்றிய துணைச் செயலாளர் முருகானந்தம், ஊராட்சிமன்ற தலைவர்கள்மாலதி வெண்ணிலா, சாரதாசிவராஜ்,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அசோக் வேலுச்சாமி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் முருகன், முன்னாள் ஊராட்சி மன்றதலைவர் பழனிச்சாமி, ஊராட்சி செயலர் பிச்சைமணி, நிர்வாகிகள் ஆறுமுகம், கிருஷ்ணன், பழனிச்சாமி,ஆறுமுகம் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.





ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டமன்றத் தொகுதி பி.மேட்டுப்பாளையம் பேரூராட்சி பூமாண்ட கவுண்டனூர் முதல் நல்லிகவுண்டனூர் வரை தார் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்ற பொதுமக்களின் 30 ஆண்டுகால கோரிக்கை அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் தொடர் முயற்சியால் நல்லிக்கவுண்டனூர் முதல் பூமாண்ட கவுண்டனூர் வரை இணைப்பு தார்சாலை அமைத்திட நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பட்டத்தரசி அம்மன் கோவில் திருப்பணி செய்ய இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நிதி பெற்றுத் தந்ததற்காகவும் ஊர் பொதுமக்கள் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலத்தை அவரது இல்லத்தில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.